சார்பு நீதிமன்றம், சங்ககிரி

MCOP No.292/2014

ம.சா.2

நாள். 08.02.2024.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பழனிசாமி | மதம்: | இந்து |
| தகப்பனார் /கணவர் பெயர்: | பெருமாள் | ஜாதி: | --- |
| கிராமம்: | வெள்ளாளபுரம் | வேலை: | --- |
| வட்டம்: | எடப்பாடி | வயது: | --- |

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.2 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர். நான் மனுதாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்து போன செங்கோட்டையன் எனக்கு பழக்கம் இல்லை. அவரை நான் பார்த்து பேசியுள்ளேன். விபத்து சமயத்தில் நான் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு நான் அவரிடம் பேசவில்லை. சாப்பிடும் சமயத்திலும் நான் பேசவில்லை. அவர் மளிகை கடைக்கு பொருள் வாங்க சென்றார் என்ற விவரம் அவர் அடிப்பட்டு கீழே விழுந்துகிடந்த போது அங்கிருந்தவர்கள் சொன்னதால் எனக்கு தெரியும். நேரடியாக தெரியாது. விபத்து சம்பந்தமாக நான் குற்றவழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். 1 ம் எதிர்மனுதாரரின் கவனகுறைவு தான் விபத்துக்கு காரணம் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியலல. விபத்தின் போது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் என் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-பழனிசாமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.